
கம்பன் புகழ்



கவிஞர் தமிழவேள்


3.99

கம்பன் புகழ்

கவிஞர் தமிழவேள்

புலவர் பதிப்பகம்
18, குட்டி கிராமணி தெரு
முத்தியால்பேட்டை, புதுச்சேரி 605003.

நன்றியுரை



இந்நூல் உருவாகக் காரணமாயிருந்த புதுவையிலும், சென்னையிலும் உள்ள **கம்பன் கழகத்தார்க்கும், புதுவை வானொலி நிலையத்தார்க்கும்**, என் மனமார்ந்த நன்றி. இதற்கு அருள் கூர்ந்து அணிந்துரை வழங்கிய தகைமிகு **கம்பன் அடிப்பொடியார்** அவர்கட்கும் சிறப்புரையளித்த திருமிகு. **ந. கோவிந்தசாமி** அவர்கட்கும் என்றும் கடமைப்பட்டுள்ளேன்.

அன்பு கூர்ந்து விளம்பரம் கொடுத்துதவிய பெருமக்களை என்றும் மறவேன்.

தமிழவேள்

குறிப்பு:- இது புதுவையில் 12-5-78 இல் நிகழ்ந்த கம்பன் விழாவில் வெளியிடப்பெற்றது.

விலை ரூ. 1-00

அணிந்துரை

புதுவையில் பிரஞ்சாசிரியராக விளங்கிய கவிஞர் தமிழவேள் ஒரு பிறவிக் கவி. முறையாகத் தமிழ் இலக்கிய இலக்கணங்களைக் கற்றுத் தேர்ந்தவர் மாம்பழக் கவிச்சிங்க நாவலரின் மறுபிறப்பென்று கருதத் தக்கவர். எவ்வகை யாப்பிலும் செய்யுள் இயற்றும் திராணியுடையவர்.

இவரைப் புதுவைக் கம்பன் விழாவிலே தான் முதன்முதற் கண்டேன். கண்டதும் கொண்டேன் காதல். ' எத்துணை நினைவாற்றல்!'' என்று பெரிதும் வியந்தேன். கவியரங்கம் ஏறிக் கவிமாலை புனைந்து கம்பன் புகழ் பாடினர். புதுவையில் மட்டுமின்றிச் சென்னை சென்றும் கவியரங்கேறிக் கவின்புகழ் பெற்றவர்.

இவருடைய கவிதைகளில் நான்கு இந்நூலில் இடம் பெற்றுள்ளன. அவற்றுடன் வானொலியிற் பேசிய பேச்சும் ஐந்தாவதாக மிளிர்கிறது முதற் கவிதையின் தலைப்பே நூலின் தலைப்பாகவும் அமைந்துள்ளது. நூல் முழுதும் ''கம்பன் புகழே

மணம் பரப்பிக்கொண்டிருப்பதால்" "கம்பன் புகழ்" என்ற பெயர் நூலுக்கு முற்றிலும் பொருந்தும்.

''சீரார் கம்பன் புகழ்பாடச்
செவ்வேல் ஏந்தும் பெருமான்தன்
ஏரார் கழலை ஏத்துவனே
என்றும் அவனை வாழ்த்துவனே!"

என்று தம் வழிபடு கடவுளை, தமிழர் தெய்வத்தை வாழ்த்துவது நூலுக்கே காப்பாக அமைந்துவிட்டது.

"கம்பன் புகழ்" என்ற முதற்கவிதை கம்பன் கவிதா சந்தத்தை அழகாக எடுத்துக்காட்டுகிறது. அடுத்துள்ள "மண்டோதரியின் தனியுரை" நம் நெஞ்சை உருக்குகிறது. அவள் கூறும் இறுதியுரை உலகோர்க்கு உரைக்கும் அறவுரையாக வள்ளுவன் மணிவாக்காக மலர்கிறது.

மூன்றாவதான "முகில்விடு தூது" கவிஞரின் சமத்காரம் எல்லாம் புலப்படுமாறு செல்கிறது. பல நயங்களும் செறிந்து மனத்தை ஈர்த்துநிற்கிறது. நான்காவதான "கம்பன் கண்ட மனிதருலகம்" கம்பன் படைத்த பல்வேறு மனிதர்களை எல்லாம் எப்படி எல்லாமோ பாராட்டி நம்மை வியப்பிலும் மகிழ்ச்சியிலும் ஆழ்த்திவிடுகிறது.

இறுதியிலுள்ள கட்டுரை கம்பன் கண்ட கனவுலகை, குடியாட்சியை அழகாகச் சித்தரிக்கிறது. மன்னர் என்பதே இல்லாமற் போகலாம்; மக்கள் என்றும் உள்ளவராயிற்றே! எனவேதான் எந்தைபிரான் கம்பன் ''மன்னன் உயிர்த்தே மலர்தலையுலகம்'' என்பதை மாற்றி ''வையம் மன்னுயிர் ஆக, அம்மன்னுயிர் உய்யத் தாங்கும் உடலன்ன மன்னவன்'' என்று புரட்சி செய்துள்ளான். இவற்றை எல்லாம் ஆசிரியர் சிறக்கச் செய்து புகழ் பெறுகிறார்.

சொற்சிலம்பமாய் இல்லாமல் கருத்தோவியமாய்த் துலங்கும் இவற்றைப் படைத்தளித்த கவிஞர் தமிழவேள் வித்துவான் எஸ். கிருஷ்ணராஜா அவர்களை மனமாரப் பாராட்டி வாழ்த்துகிறேன். தமிழ் கூறும் நல்லுலகம் இவர்க்கு நன்றி செலுத்திப் பாராட்டப் பெரிதும் கடமைப் பட்டுள்ளது வாழ்க! வளர்க!

கம்பன் மணிமண்டபம்
காரைக்குடி
29-4-78

அன்பன்
கம்பன் அடிப்பொடி

[அணிந்துரையுடன் வந்த மடல்]

அன்புள்ள தமிழவேள் அவர்கட்கு வணக்கம்!

உங்கள் கடிதமும் அச்சுத்தாள்களும் வந்தன. அனைத்தையும் ஒருமுறை கண்ணோட்டமிட்டேன். அருமையாக உள்ளன. மிகவும் மனதிருப்தியுடன் "அணிந்துரை" என்ற ஒன்றை எழுதி இத்துடன் அனுப்பியுள்ளேன்.

நீளமாக எழுதவேண்டும்; பல பாடல்களை எடுத்துக் காட்டிப் பாராட்டவேண்டும்; என்று ஆசைப்பட்டேன். ஆனால் 44 பக்கங்களே உள்ள ஒரு புத்தகத்திற்கு நீளமாக அணிந்துரை எழுதுவது நாகரிகமாக இருக்காதென அஞ்சியே இருபக்க அளவில் எழுதி முடித்தேன்.

கம்பன் அடிப்பொடி

கவிஞரைப் பற்றி

வித்துவான் கி. வா. ஜகந்நாதன், எம் ஏ. அவர்கள்

தண்ணந் தமிழின் நயமெல்லாம்
சால உணர்ந்த பெரும்புலவன்

வண்ணஞ் சிறக்கக் கவிபாட
வல்லோன், புலவர் வியக்கும்வகை

பண்ணொன் றியபல் கவியாங்கில்
பாடி வெல்லும் தமிழவேள்

அண்ணல் முருகன் பெருமையெனும்
அழகு நூலை வழங்கியுள்ளான்.

சிறப்புரை

நண்பர் கவிஞர் சா. கிருஷ்ணராஜா (தமிழவேள்) அவர்கள் இயற்றியுள்ள கம்பன் புகழ் என்ற கவிதை நூலைப் படி தேன் சுவைத்தேன்; அனைத்தும் தேன்துளிகள். கவிஞர் தமிழவேள் இயல்பாகவே கவிதையாற்றும் ஆற்றல் மிக்கவர். அதிலும் கம்பனிலே தோய்ந்துவிட்டால் கேட்கவாவேண்டும்? கம்பனின் பா நயத்தை அதன் உட்பொருளைப் பலரும் புரிந்து கொள்ளும் வண்ணம் கவிதைகள் அமைந்திருப்பது பாராட்டு தற்குரியது. கம்பன்புகழை மீண்டும் மீண்டும் படிக்க வேண்டும் போல் தோன்றுகிறது.

பிறவிக் கவிஞருக்குரிய நகைச்சுவையோடு எடுத்தாளும் சொல்வளம் ஆங்காங்கே குதித்துக்கொண்டு வருவதைக் காணலாம்.

வண்மையில்
வானிலுனைக் கண்டால் வசமிழக்கும் வண்டுதான்
தேனைக் குடித்துத் திசைமறக்கும்-தேனெடுபால்
தந்துநான் வீட்டில் வளர்க்கும் தனிக்கிளியை
அந்த இடத்திற் கனுப்பினல்-முந்திநான்
காம மயக்கத்தால் காலரையாச் சொன்னவற்றைத்
தூமொழியார் கேட்கத் தொடர்ந்துரைக்கும்-பூவும்
அன்னந் தனையனுப்பின் அன்பரைக்கா ணாமலே
முன்வந்து கண்டேன் எனமொழியும்

என்பனபோன்ற அடிகள் என்நெஞ்சில் நிறைந்துவிட்டன. கம்பன் புகழ்பாடிக் கன்னித் தமிழ் வளர்க்கும் கவிஞரை வாழ்த்துகின்றேன். பாராட்டுகின்றேன். இந்நூலை அனைவரும் படித்து இன்புற வேண்டுகிறேன்.

ந. கோவிந்தசாமி
செயலர், கம்பன் கழகம்
புதுச்சேரி

தமிழ் வாழ்த்து

அன்னையே தமிழே என்றன்
ஆவியே அறிவு நல்கி
என்னையே வளர்த்து விட்ட
எந்தையே நல்லொ ழுக்கம்
தன்னையே உணர்த்தும் முப்பால்
தந்தமெய்த் துணையே அன்பே
உன்னையே நம்பி இந்த
உலகினில் வாழ்கின் றேன்நான்.

எண்ணும்நீ எழுத்தும் நீயே
இசைத்திடு பயனும் நீயே
கண்ணும்நீ கருத்தும் நீயே
கலைகளின் நற்றாய் நீயே
பண்ணும்நீ பாட்டும் நீயே
பாவலர் நெஞ்சில் ஆடும்
பெண்ணும்நீ வாழ்வில் என்றும்
பிரிந்திடா உறவும் நீயே.

பாவினில் அழகு காட்டிப்
பழகிடும் மானே என்றன்
நாவினில் இனிக்கும் தேனே
நல்லயாழ் இசையே செஞ்சொல்
காவினில் மணம்ப ரப்பும்
கற்பக மலரே என்றும்
தாவின்றி புகழ்வி ரிப்பேன்
தண்டமிழ் அமிழ்தே வாழி!

கம்பன் புகழ்

சீரார் கம்பன் புகழ்பாடச்
செவ்வேல் ஏந்தும் பெருமான்தன்
ஏரார் கழலை ஏத்துவனே
என்றும் அவனை வாழ்த்துவனே.

எத்தனை காப்பி யங்கள்
இருப்பினும் தமிழர் கண்ட
அத்தனை உயர்ந்த பண்பும்
அமைந்திடக் கம்ப நாடன்
முத்தென அமுத மென்ன
மொழிந்தநற் காப்பி யந்தான்
இத்தரை மாந்தர் நெஞ்சை
ஈர்த்திடும் என்று சொல்வேன். (1)

காரணம் என்ன? கம்பன்
காப்பியந் தன்னைக் கற்போர்
பாரினில் முன்பு கற்ற
பனுவலில் கண்டி ராத
சீரினைக் காண்பர் எங்கும்
சிரித்திடும் அழகு காண்பர்
பூரண மான இன்பப்
புதையலி(து) எனக்க ளிப்பர். (2)

நடைநலம் நோக்கி நூலை
நயந்தொரு முறைப டிப்பர்
தொடைநலம் நோக்கி மீண்டும்
தொடர்ந்தொரு முறைப டிப்பர்
கொடைநலம் நோக்கி ராமன்
குணநலம் நோக்கிச் சொற்கள்
அடைநலம் நோக்கிப் பின்னர்
ஆயிரம் முறைப டிப்பர். (3)

கற்றவர் உள்ளந் தோறும்
களிநடம் புரியும் கம்பன்
நற்றமிழ் நூல்பா வாணர்
நாடிடும் பேரங் காடி
பற்றுடன் பயில்வோர்க் கேற்ற
பல்கலைக் கழகம் வேண்டா
வெற்றுரை யாளர் கூட
விரும்பிடும் பருவ மங்கை (4)

பொன்னையும் மறப்பர் செல்வப்
புதல்வரை மறப்பர் கண்ட
கன்னியை மறப்பர் கொண்ட
கடனையும் மறப்பர் வேலை
தன்னையும் மறப்பர் வாட்டம்
தந்திடும் பசிம றப்பர்
தன்னிக ரில்லாக் கம்பன்
தருந்தமிழ் அமுதுண் போரே. (5)

பாலனைக் கவரும் பொம்மை
பாவையைக் கவரும் பட்டு
வாலிபர் தம்மை மங்கை
வாள்விழி கவரும். கட்சி

மேவிடத்த வரைத் தேர்தல்
        மிகுதியும் கவரும் ஆனல்
சீலமிக் கோரைக் கம்பன்
        செந்தமிழ் கவரும் என்பேன். (6)

சம்பளம் அதிகம் வாங்கச்
        சார்பெறும் பதவி தாங்கக்
கொம்பினை மணக்கும் போதில்
        கூறுதட் சணையைக் கூட்ட
நம்பியிங் (கு) ஆங்கி லத்தை
        நாடியே கற்போர் தாமும்
கம்பனின் பாட்டைக் கேட்டால்
        கனிநிகர் தமிழைக் கற்பார். (7)

கண்டென அதனைச் சொன்னல்
        கரைந்திடும் பண்பிங் கில்லை
ஒண்டொடி என்ருல் கண்ணீர்
        உகுத்திடா தென்றும் அல்வாத்
துண்டெனச் சொன்னல் கொள்ளத்
        தெவிட்டிடும் சுவைதான் இல்லை
கண்டநல் லமிழ்தென் ருலோ
        கடுவிடம் முன்தோன் ருது. (8)

ஈரத்தைச் சொல்லு வேனு
        இணையிலாக் கம்பன் கண்ட
வீரத்தைச் சொல்லு வேனு
        விரித்திடும் தத்து வத்தின்
சாரத்தைச் சொல்லு வேனு
        சாற்றிய கருத்து மோதும்
தீரத்தைச் சொல்லு வேனு
        தெளிவினைச் சொல்லு வேனு. (9)

பாரதி முதலா வந்த
பாவலர் எல்லாம் கம்பன்
பாரதி தன்னைக் கண்டு
நெஞ்சினைப் பறிகொ டுத்துப்
பாரதி பெரியன் கம்பன்
பாரகா வியத்தை இந்தப்
பாரதி ச்யிக்கும் வண்ணம்
படைத்தனன் என்றார் வாழ்த்தி. (10)

எதுகைக்கும் மோனை கட்கும்
இடர்ப்படும் கவிஞர் இப்போ(து)
எதுகைக்கு வருமோ என்றே
ஏங்கிடும் போது யானை
விதிகைக்க அழைத்த நாவில்
விரைந்தமால் போலக் கம்பன்
மதுகைக்கப் பாடி வைத்த
மணிக்கவி வந்து தோன்றும். (11)

கற்பனை வளமில் லாரும்
கருத்தினில் தெளிவில் லாரும்
அற்புத உவமைக் காக
அலைந்திடு வோரும் கல்வி
பொற்புறக் கல்லா தோரும்
புண்ணியன் கம்ப னாலே
நற்பெறும் கவிஞ ரானார்
நாவலர் ஆனார் இங்கே. (12)

சீரினைப் பெற்று வாழும்
திரைப்பட உலகில் நின்று
பேரினைப் பெற்ற பாக்கள்
பிறந்திடக் கார ணந்தான்

யாரென நினைத்தீர் நந்தம்
அருங்கவி கம்பன் என்றால்
யாரிதை மறுப்பார் கண்ண
தாசனே ஆமோ திப்பார். (13)

வீரமா முனிவர் அன்று
விரித்ததேம் பாவ ணிக்கும்
சீரெலாம் படைத்த சீறுப்
புராணநன் னூற்கும் கம்பன்
பாரிடை விரித்த நூலே
பாதையை வகுத்த தென்றால்
ஆரவன் சீர்அ ளப்பார்
அலைகடல் அளக்கற் பாற்றோ? (14)

பூவண்ணம் காட்டும் சோலை
புகழ்வண்ணம் காட்டும் தேர்தல்
தீவண்ணம் காட்டும் செவ்வான்
திரைவண்ணம் காட்டும் கும்பல்
நாவண்ணம் காட்டும் பேச்சு
நகைவண்ணம் காட்டும் மேனி
பாவண்ணம் காட்டும் கம்பன்
பகர்வண்ணக் கோட்டம் தானே (15)

மெச்சிடும் கம்பன் பாட்டில்
மேம்படும் சுவையைக் கண்டோன்
இச்சுவை தவிர யான்போய்
இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்
ஆதலின் இறைவா பன்னாள்
இச்சகத் திருக்கும் வண்ணம்
எனக்கருள் புரிவாய் என்பான். (16)

ஆறு சுவைகள் உணவினிலே
அமையும் என்பர். பாக்களிலே
ஏறு சுவைகள் ஒன்பதென்றே
இசைப்பர். ஆனல் முக்கனியின்
சாறு கசக்கக் கம்பர்பிரான்
தந்த செஞ்சொற் காப்பியத்தில்
ஊறு சுவைகள் நூறென்றே
உரைத்தால் அதுவும் குறைவாமே. (17)

அலங்கார நூல்கள் காட்டும்
அணிகளோ கொஞ்சம் கம்பன்
இலங்காரப் பேழை காட்டும்
அணிகளோ பலவாம் எண்ணி
நலங்காண ஒருநூ றுண்டு
நமக்குவாய்த் திலதே என்று
கலங்காத கவிஞர் உண்மைக்
கவிஞரே அல்லர் என்பேன். (18)

பத்தழ கிருக்க வேண்டும்
பனுவலில் என்பார். கம்பன்
கொத்தழ காயி ரத்தைக்
கொட்டினன் நூலில். உள்ள
புத்தழ கொவ்வொன் றிற்கும்
புதுப்பெயர் இடுவ தற்கு
வித்தகன் கம்பன் அல்லால்
வேறெவர் வல்லார் இங்கே? (19)

நான்முகன் படைத்து விட்ட
அழகெலாம் ஞாலத்தில்
பான்மதி போல நாளும்
படிப்படி யாகத் தேயும்

தேன்மொழி கொண்டு கம்பன்
திட்டிய அழகோ அந்தக்
கூன்மதி அணிந்தோன் தந்த
குமரவேள் போல வாழும். (20)

எந்தநூல் கற்ரு ரேனும்
ஈடிலாக் கம்ப நாடன்
தந்தநூல் கல்லா ராயின்
தமிழராய்ப் பிறப்பெ டுத்து
வந்ததன் பயனை எய்தார்
மருவிடும் துணைவ னின்றி
இந்தமா நிலத்தில் வாழும்
ஏந்திழை இளமை என்னும்! (21)

தம்பியர் அன்பை; ஈன்ற
தாயரின் பரிவை; அந்த
நம்பியின் அருளைத் தூய
நங்கையின் கற்பைக் காட்டும்
கம்பரா மாய ணத்தைக்
கற்றிடும் வாய்ப்பு பெற்ருல்
அம்புவி தனில்பி றக்க
யாவரே அஞ்சி நிற்பார். (22)

இன் றமிழ் நாட்டில் மக்கள்
எண்ணிக்கை மிகுந்த தற்கே
இன்ெருரு கார ணத்தை
யான்கண்டு கொண்டேன்! கூடி
அன் றமிழ் துண்ட தேவர்
அமிழ்தினும் இனிய கம்பன்
தென் றமிழ் உண்ண வேஇத்
திருநாட்டில் பிறந்து விட்டார். (23)

வால்மீகி முனிவன் இந்த
    வண்டமிழ் மண்ணில் தோன்றி
நூல்மேவு கம்பன் செய்த
    காவிய நுட்ப மெல்லாம்
பால்மேவிக் காண்பா னயின்
    பண்டுதான் செய்த நூலைச்
சேல்மேவு கடலில் இட்டுக்
    கம்பனை வாழ்த்திச் செல்வான். (24)

எப்படிப் பாட வேண்டும்
    எதைஎதைப் பாட வேண்டும்
எப்படி எதனைச் சொன்னல்
    இனித்திடும் கரும்பாய் இந்தச்
செப்படி வித்தை யெல்லாம்
    தெரிந்தவன் கம்பன் அந்த
ஒப்பிலான் காப்பி யத்தை
    ஓதுவோர் உயர்வர் மாதோ! (25)

மண்டோதரி

(மண்டோதரியின் பேச்சாக அமைந்தது இது)

அன்றுநான் சொன்ன சொல்லை
அரக்கர்கோன் கேட்டிருந்தால்
வென்றுவான் கொண்ட ஆட்சி
வீடணன் கைக்குப் போமா?
இன்றுநான் துயரமேந்தி
இலங்கையின் அகதியாக
நின்றுமான் போல்மருண்டு
நிலைதடு மாறுவேனா? (1)

திருமகள் நாண வாழ்ந்தேன்
தேசுடை மயனார் பெற்ற
ஒருமகள் நானே அந்த
ஒப்பிலான் வெற்பெடுத்த
பெருமகன் தனைமணந்தேன்
பேசுமிந் திரனை வென்ற
ஒருமகன் தனையும் ஈன்றேன்
உவகையின் எல்லை கண்டேன். (2)

மேனகை கால்பிடிப்பாள்
மேவிஊர் வசி தான்என்றன்
மேனகை அணிவாள் மெல்ல
விசிறுவாள் திலோத்தமைதான்
நானகை முகத்தைக் காண
நவையிலா ஆடி காட்டி
வானக அரம்பை நிற்பாள்
மகரயாழ் இசையும் சேர்ப்பாள். (3)

விண்பட்ட மாதர் மீதென்
விழிபட்டால் ஓடி வந்து
தண்பட்ட சாந்தெடுத்துத்
தளிர்பட்ட மேனியின் மேல்
புண்பட்டி டாயற் பூசிப்
பூம் பட்டுத் துகிலை இட்டுக்
கண்பட்டு விடுமோ என்று
கற்பூரத் தட்டெடுப்பார் (4)

அழகிலான் எனினும் கண்ட
ஆடவர் நெஞ்சை ஈர்க்கப்
பழகிய தில்லை என்னைப்
பார்த்தவர் மதிக்கும் வண்ணம்
ஒழுகினேன் கற்பின் மிக்கார்
ஐவருள் ஒருத்தி என்ற
விழுமிய நிலையும பெற்றேன்
விடையவன் அருளும் உற்றேன் (5)

ஓதுவோர் நெஞ்சம் கல்லாய்
இருப்பினும் உருக்கிக் கைலை
நாதனர்க் காட்ப டுத்தும்
நற்றிரு வாச கத்தில்
வாதவூ ரன்பர் அன்று
வான்குயிற் பத்தில் ஈசன்
பேதையேற் கருள் புரிந்த
பெற்றியைக் குறித்தார் நன்றே. (6)

கைத்தலம் பற்றி வாழ்ந்த
கணவனர் தமக்கு வாய்த்த
கொத்தலர் குழலார் பல்லோர்
ஆயினும் கோல வானில்

தத்திடு குளிர்வெண் திங்கள்
　　தனக்குரோகிணிபோல் மௌலி
பத்துடை நாயகற்குப்
　　பாங்கமர் தேவி நானே. (7)

இப்படிப் பட்ட வாழ்க்கை
　　எல்லையைக் காணு தென்றே
அப்பொழு தெண்ணி னேன்நான்
　　ஆயிரம் இருந்திட் டாலும்
இப்புவி தனிற்பெண் ணாகப்
　　பிறந்தவர் இடிக ளுக்குத்
தப்பிட முடியா தென்னும்
　　தன்மையைப் பின்பு ணர்ந்தேன் (8)

கண்ணெனக் கருதும் பெற்றோர்
　　கன்னியாய்ப் பிறந்திட் டாலும்
மண்ணினை ஆள்வோன் அன்பு
　　மனைவியாய் வாழ்ந்திட் டாலும்
விண்ணையும் வெற்றி கொள்ளும்
　　வீரனைப் பெற்றிட்டாலும்
பெண்ணெனப் பிறந்தோர்க் கிங்கே
　　பெருந்துயர் உடைமை யம்மா! (9)

மாமியார் கொடுமை இல்லை
　　மருமக ளாக வந்த
தூமொழி மடவா ராலும்
　　தொல்லையே யில்லை ஆனால்
காமமே பொருளாக் கொண்டு
　　காடெலாம் திரிந்து நாளும்
தீமையே புரிந்த சூர்ப்ப
　　நகையினால் சிறுமை யுற்றேன் (10)

அழித்தவள் அவள்என் வாழ்வை
அருங்குணச் சீதை தன்னைப்
பழித்தவள் கணவன் மாண்ட
பின்னரும் பாரில் நின்று
கொழுத்தவள் காட்டிற் கண்ட
கோசலை மகனைக் கூட
இழுத்தவள் அதனால் மூக்கை
இழந்தவள் அவள்என் நாத்தி. (11)

நாத்தி மார்தாம் பலருக்கும்
நாட்டில் இருப்பர் என்றாலும்
நாத்தி எனக்கு வாய்த்ததுபோல்
நங்கை எவரும் பார்த்தறியார்
நாத்தீ கொண்டென் குலத்தனையே
நாடி எரித்த தாலவட்கு
நாத்தீ ஒருமாத் திரைகுறைந்து
நற்கா ரணப்பேர் ஆயிற்றே (12)

பேயென அவளைச் சொன்னால்
பெண்ணினுக் கது இரங்கும்
நாயெனச் சொன்னால் வேண்டும்
நன்றியோ சிறிதும் இல்லாள்
நோயெனச் சொன்னால் அஃது
நொந்தவர் தம்மை அல்லால்
மாயிரு சுற்றந் தன்னை
மாய்த்திடக் கண்ட தில்லை (13)

மூக்கினை அறுத்த தம்பி
மூட்டிய தீயன் றெனின்
நாக்கினை அறுத்தி ருந்தால்
நாசமேற் பட்டி ராது

தீக்கனை ஒன்ருல் அந்தச்
சிறுக்கியின் ஆவி தன்னைப்
போக்கி விட்டிருந்தால் நானும்
பூவிழுந் திருக்க மாட்டேன் (14)

போரினில் திரண்டு வந்த
புறப்பகை யனைத்தும் வென்று
வீரராய்த் திகழ்ந்த எங்கோன்
வேல்விழி யாரைக் கண்டால்
தாரமாய்க் கொள்ள எண்ணும்
அகப்பகை தடிந்தா ரல்லர்
பாரிலிப் பண்ப றிந்தே
பாவியென் குடிகெ டுத்தாள் (15)

குன்றினை எடுத்த கோமான்
கொடியவள் பேச்சைக் கேட்டுச்
சென்றுவெங் கானிற் கண்ட
செல்வியை எடுத்து வந்தே
என்றுதென் இலங்கை தன்னுள்
இடருற வைத்திட் டாரோ
அன்றேஎன் இன்ப வாழ்வின்
அடித்தளம் ஆடிற் றம்மா (16)

வானவர் காலில் வீழ்ந்து
வணங்கிநின் றேவல் கேட்கக்
கோனகர் பொலிய ஆண்ட
கொற்றவர் மிதிலை வந்த
சானகி காலில் வீழ்ந்து
கெஞ்சிய செய்தி கேட்டு
நானகம் குன்றி நின்றேன்
நலமெலாம் சரியக் கண்டேன் (17)

இலங்கை வேந்தன் என்றவுடன்
எட்டுத் திக்கு யானைகளும்
கலங்கும் வானில் உள்ளவர்தம்
கைகால் நடுங்கும் சூரியனும்
வலங்கொண் டிடுவான் கூற்றுவனே
வணங்கிச் செல்வான் இந்நிலைமை
இலங்கு கன்னி சானகியை
எடுத்த அன்றே வீழ்ந்ததுகாண். (18)

இலக்குமி அம்சம் என்றே
யாவரும் கருதும் சீதை
கலக்கமில் இலங்கை மண்ணில்
காலடி வைத்த பின்னர்
உலுக்கினள் எங்கள் வாழ்வை
ஒவ்வாத நெறியில் வந்தால்
இலக்குமி புகுந்த வீட்டில்
இடர்விளைத் திடுவாள் போலும். (19)

பத்துநான் பெற்றே னல்லன்
பண்பெலாம் நிறைந்த பிள்ளை
முத்தென இரண்டு பெற்றேன்
முதலிலே இலங்கை வந்த
வித்தகக் குரங்கால் மாண்டு
வீழ்ந்தனன் இரண்டாம் மைந்தன்
அத்திரு மகனே அக்கன்
அமர்பல கடந்த வீரன் (20)

அன்னவன் வீழ்ந்த அன்றே
அருமணி இழந்த நாகம்
தன்னையே போல்த ளர்ந்து
தாங்கொணாத் துயர முற்றேன்

மன்னிய தவத்தா லென்றன்
மணிவயிறு ஏந்திப் பெற்ற
முன்னவன் தானும் போரில்
முடிந்தனன் என்றூர் பின்னர் (21)

அம்மொழி கேட்ட போதே
அடியற்ற மரம்போல் வீழ்ந்தேன்
செம்மைசேர் புண்ணில் காய்ந்து
சிவந்தவேல் நுழைந்ததைப்போல்
அம்மநான் துடித்தேன் வானத்து
இடியுண்ட அரவ மானேன்
எம்மருங் குள்ளான் என்றன்
இந்திர சித்தென் றேன்நான். (22)

வேதனைத் தீயில் வெந்து
வெளியில்நான் பார்த்த போது
சீதையை எடுத்த கையால்
செல்வனை எடுத்து வந்து
மாதிரம் காண வைத்தார்
மௌலிபத் துடையார் அந்தோ
பேதையேன் தலையி ழந்த
பிள்ளையின் உடலைக் கண்டேன். (23)

விடுபட்ட அம்பி னைப்போல்
வேகமாய்ப் பாய்ந்து சென்று
பொடிபட்ட நிலத்தின் மேலே
பொருப்பெனக் கிடந்தோன் மார்பில்
அடிபட்ட மயிலைப் போல
ஆவெனக் கதறி வீழ்ந்தேன்
இடிபட்ட நெஞ்சத் தேயோர்
எண்ணமும் தோன்றிற் றன்றே (24)

வேக நாதன் இலக்குவன்தான்
விடுத்த கணையால் இன்றிந்த
மேக நாதன் போய்விட்டான்
மேவும் கும்ப கன்னரும்அத்
தோகை நாதன் வாளியினால்
துறந்தார் ஆவி இனியென்றன்
ஏக நாதர் எதிர்காலம்
என்னும் என்றே அஞ்சினன்யான் (25)

தந்தையின் ஆசைக் காகத்
தாங்க,ரும் மூப்பை ஏற்ற
மைந்தனைப் போற்றி இந்த
மாநிலம் கூறும் ஆனால்
இந்திர சித்தெ னும்பேர்
ஏற்றஎன் வீர மைந்தன்
தந்தையின் காமத் திற்குத்
தலையையே கொடுத்து விட்டான் (26)

கலையெடுத்த அம்புலியை அழைத்துக் கையால்
கறைதுடைத்து விளையாடி வளர்ந்த போதே
சிலையெடுத்துச் சிங்கத்தைக் கொன்று பின்னர்ச்
சீரெடுத்த இந்திரனை வென்ற வன்தன்
தலையெடுத்தால் தான்அந்த வானோர் மீண்டும்
தலையெடுப்பார் என்றெண்ணித் தானே வந்த
கொலையெடுத்த கூர்வாளி தலையைக் கொண்டு
குறையெடுத்த உடலதனை விட்ட திங்கே (27)

எதுநடக்கக் கூடாதென்(று) அஞ்சினேனே
இந்திரசித் துயிர்விட்ட அடுத்த நாளே
அதுநடந்து விட்டதையோ என்ன சொல்வேன்
அயோத்தியர்தம் கோமானால் இலங்கை வேந்தன்
கதைமுடிந்து விட்டதென்றார் கலங்கி வீழ்ந்தேன்
கண்ணிரண்டும் ஆறாக ஓடிப் பொல்லா
விதிநடந்த போர்க்களத்தை அடைந்தேன் வெள்ளி
வெற்பெடுத்த பொன்னுடலை மண்ணிற் கண்டேன் (28)

புல்லிடைத் துயின்ற நம்பி
போரிடைத் துறந்த அம்பால்
சல்லடைக் கண்க ளாகித்
தலத்திடைக் கிடந்த வைரக்
கல்லுடல் கண்ட போதே
கனலிடை மெழுகு போல் என்
மெல்லுடல் உருகிற் றுள்ள
வேதனை பெருகிற் றம்மா (29)

விண்ணெலாம் நடுங்கச் செய்த
மேனிதான் விழுப்புண் காட்ட
புண்ணெலாம் குருதி காட்ட
முகமெலாம் பொலிவு காட்ட
எண்ணிலா வரங்கள் பெற்ற
எம்பிரான் கிடக்கக் கண்டேன்
கண்ணெலாம் அருவி காட்டக்
கதறினேன் பதறி வீழ்ந்தேன் (30)

கரத்தினில் வில்லை ஏந்திக்
கானிடை நடந்த வீரன்
சரத்தினுல் தென்னி லங்கை
வேந்தரைச் சாய்த்தா னல்லன்
தரத்தினில் மிகஉ யர்ந்த
தவத்தினுல் முயன்று பெற்ற
வரத்தினைச் சாய்த்தான் எங்கள்
வாழ்வையும் சாய்த்து விட்டான் (31)

போராண்மை கொண்ட எங்கோன்
புவிமீது பிறனில் நோக்காப்
பேராண்மை கொண்டி ருந்தால்
பெருவாழ்வு நிலைத்தி ருக்கும்
ஊராண்மை கொண்டோரே இங்(கு)
உயர்வான புகழை வேண்டின்
பேராண்மை கொள்வீர் கொண்ட
பெண்ணோடே இன்பம் காண்பீர் (32)

சென்னை 15-8-76

முகில் விடு தூது

[கம்பனிடம் காதல் கொண்ட பெண்ணொருத்தி முகிலை (மேகத்தை) அழைத்து அவன் பால் தூது விடுவது போல் அமைந்தது இது.]

முகிலை விளித்துப் புகழ்தல்

சீரேந்தும் வான்வெளியில் செல்லும் கதிர் மறைத்துப்
பாரேந்தும் இன்னல் பறந்தோட—நீரேந்தி

ஓடும் முகிலே ஒருகணம்நீ நில்லாயோ
வாடும் எனக்குதவ வாராயோ—நாடும்

புகழனைத்தும் கொண்ட புயலேநீ என்னை
இகழ நினைத்தல் இயல்பே—அகில் மணக்கும்

என் கூந்தல் உன்னைமுன் எள்ளியதால் மூண்டெழுந்த
உன்கோபம் தன்னை ஒழித்திடுவாய்—என்கோவே

பட்டந்தான் பெற்றாலும் பாரனைத்தும் ஆண்டாலும்
மட்டந்தான் பெண்ணறிவு மாறிடுமா—பட்டறிவால் (5)

முன்னாளில் ஔவை மொழிந்த கருத்திதுதான்
பின்னாளில் மாறிப் பிழைபடுமா—என்னோடு

சேர்ந்த குழலுக்குச் சேர்ந்திடுமா பேரறிவு
நேர்ந்த பகையை நினையாதே—சோர்ந்துவிழும்

கூந்தலுக்கு உன்பெருமை கூடிடுமா கூவந்தான்
நீந்தரிய ஆழியின்முன் நின்றிடுமா—ஏந்தும்

திருக்குறளில் உன்சிறப்பைத் தெய்வப் புலவர்
பொருத்தமுற முன் இயம்பிப் போற்றி—விரித்தோர்

அதிகாரம் தந்த அதனாலே உன்றன்
அதிகாரம் மேம்பட்ட தன்றோ — அதிகாரம்
நீக்க உதவிடுவாய் நீயே உனதுசெல்
வாக்கை அறியார்யார் வையகத்தில் — நோக்குங்கால்
மாரி எனும்பெயரில் மன்னுயிர்க்குத் தண்ணமுதை
வாரி வழங்குகின்ற வள்ளல்நீ — சூரியனின்
சீற்றத்தால் மாநிலத்தில் சேரும் வறட்சியினை
மாற்றி உயிர்காக்கும் மன்னன்நீ — ஏற்றெவரும்
உண்ணுதற் கேற்ற உணவை அமைத்தருந்தத்
தண்ணீர் வழங்குந் தனித்தாய்நீ — எண்ணில்
கருப்பொருள்கள் தோன்றுதற்கும் காரணமாய் நீயே
இருப்பதனால் தந்தையும்நீ என்பேன் — பொருப்பென்று
கூறும் நிலமகளின் கொங்கையில் ஊற்றெடுக்கும்
ஆறும் உனதணைப்பால் ஆவதன்றோ — நீறணிந்த
செம்மேனி யெம்மான்போல் சென்று கடல்முகந்து
அம்மால் எனக்கறுத்து ஆர்த்தெழுந்து — இம்மா
நிலத்தில் முகிலேநீ நெஞ்சாரப் பெய்து
நலத்தை விளைக்கின்றாய் நாடி — நிலத்திடையே
உன்கொடை இல்லையென்றால் ஊரார் அளக்கின்ற
நன்கொடை ஏது நடைஏது — மின்கொடைக்கும்
வெட்டு வருமே விரும்பும் பொருளுக்குத்
தட்டு வருமே தடையின்றித் — திட்டமிட்ட
காரியம் எல்லாம் கடையாணி தானிழந்த
பாரவண்டி போலப் படுத்துவிடும் — ஏரதனை
நம்பியவர் எல்லாம் நலமிழப்பர் நீர்தேடி
அம்பவள வாயார் அலமருவர் — அம்புவியில்

கோயில் விழாவும் குடமுழுக்கும் பூசனையும்
நீயில்லை என்றால் நிகழ்ந்திடுமா—நீயிங்கே

என்றுமே கைம்மா றெதிர்பார்த் திடாதெங்கும்
சென்று கடனாற்றும் தியாகிநீ—குன்றா

காதலர் மாண்புரைத்தல்

எழிலியே உன்பெருமைக் கெல்லையுண்டோ அன்பால்
மொழிவதனைக் கேட்டருள்வாய் முன்னே—விழிவழியே

உள்ளே நுழையா ஒருவர்க்கென் உள்ளத்தை
அள்ளிக்கொடுத்திங் கழிகின்றேன்—வள்ளலவர்

என்றுமுள தென்றமிழின் ஏற்றமெலாம் கண்டுணர
நின்றொளிரும் காவியத்தை நீட்டியவர்—அன்றே

விருத்த மெனும்குமரி வேண்டு மெழிலோடு
நிருத்தமிடச் செய்திட்ட நேசர்—பொருத்தமற

உன்வண்ணம் கொண்ட ஒருவன் திருக்கதையைப்
பொன்வண்ணம் கொண்டு புதுக்கியவர் மின்வண்ணம்

காட்டும் இடையாளைக் கற்பின் கனலியென்று
நாட்டும் திறம்விரித்த நாயகர்—காட்டில்

குகனையும் தம்பியெனக் கொண்டபிரான் வெய்யோன்
மகனையும் தம்பியெனக் கொண்டு—தகவுடைய

விடணன் தன்னையும் வேண்டியொரு தம்பியென
நாடறியக் கொண்ட நலத்தினையும்—பாடியவர்

மங்கையர் மாண்பினையும் மானுடத்தின் வெற்றியையும்
சங்கத் தமிழ்மணக்கச் சாற்றியவர்—தங்குமெழில்

வேல் விழியாள் என்றிங்கே வேறொருவ னுக்குரியாள்
மேல்விழிவைத் தால் இறுதி மேவுமென—மால்விடுத்த

அம்பினால் வீழ்ந்த அரக்கன் தலைக்காட்டி
நம்பும் படியுரைத்த நற்றமிழர்-கம்பரெனும்
பேருடையார் கல்வியிற் சாலப் பெரியரெனும்
சீருடையார் மாறாச் சிறப்புடையார்-பாரறிய
வித்தாரப் பாவலராய் வீற்றிருந்து முத்தனைய
பத்தாயிரம் பாடல் பாடியவர்-இத்தரையில்

இராமாயணத்தின் இயல்பு

வள்ளுவனார் அன்றளித்த வான்மறைக்கோர் பேருரையாய்த்
தெள்ளுதமிழ் ஓவ்யத்தைத் தீட்டியவர்-உள்ள
தமிழரல் லாதாரும் தண்டமிழைக் கற்றே
அமிழ்தாம் அவர்நூலில் ஆழ்வார்-தமிழறிந்த
எம்மதத் தோரும் இராமாவ தாரமெனும்
அம்மகா காவியத்தை ஆர்வத்தால்-தம்முடைய
நூலாகக் கொண்டு நுவலும் சுவைகண்டு
மாலாகி நாளும்மகி ழ்ந்திடுவார்-மேலான
கற்கண்டும் நற்றேனும் கம்பரா மாயணத்தின்
சொற்கண் டோர் தம்பால் சுவையிழக்கும்-விற்கண்ட
அம்பனைய கண்ணுடையாள் அன்பனிடம் காய்ச்சியபால்
செம்புடனே பூமணக்கச் சென்றாலும்-கம்பரது
நூலை அவன்படித்தால் நுண்ணிடையாள் தோள்நோக்கான்
பாலையும் நோக்கான் படித்திடுவான்-நூலதனை
பால அயோத்தியா ஆரண்யா கிட்கிந்தா
சீலமார் சுந்தர யுத்தமெனும்-கோலமிகு
காண்டங்கள் ஓராறும் கையொன் றிலேயடங்க
வேண்டுமென் று கண்ட வெளியிட்டை-ஈண்டொருத்தி
கொண்டு வந்தென் கையில் கொடுத்துப் படியென்றாள்
கண்டவுடன் வைரநகை கண்டவள்போல்-கொண்ட

மகிழ்வோட தனை மலர்க்கரத்தில் ஏந்தி
மிகுமாவ லால்திறந்தேன் மெல்லத்-தகவேந்தும்

பாயிரம் கண்டு படிக்கத் தொடங்கியதும்
மாயிருஞா லத்தை மறந்தேன்யான்—தூயநூல்

காதல் மிகுதியைக் கூறுதல்

தந்த கோமானைத் தமிழர் பெருமானைச்
சிந்தையில் கொண்டு செயல்இழந்தேன்—அந்தத்

தலைமகனைக் கண்டு தழுவாமல் இங்கே
கலைநெகிழக் கைவளையும் சோரக்-குலைகின்றேன்

கண்டதும் காதலென்பார் காணாமலேகாதல்
கொண்டேன் இது என்ன கூத்தென்றார்-கண்டவர் தாம்

வெப்பம் தனிக்கின்ற மேகமே என் காம
வெப்பம் தணிக்க விரும்பாயோ-செப்புகின்ற

தாகத்தை மாற்றுதற்குத் தண்ணீர் தருவாய்என்
மோகத்தை மாற்ற முயலாயோ-வேகமாய்

வாடும் பயிர்காக்க வந்திடுவாய் பூங்கணையால்
வாடும் எனைக்காக்க வாராயோ-ஓடுகின்ற

காற்றினையே ஊர்தியெனக் கண்டாய்நீ தென்றலெனும்
காற்றினையே ஊர்தியென்பார்காமனுக்கும்—நாற்றிசையில்

எங்கவனைக் கண்டாலும் இன்பமுகங்காட்டி
இங்கெனைவாட் டாமல் இருக்கச்சொல்-திங்களெனும்

பாவியின் ஆட்சி பரவாமலேமறைத்தென்
ஆவியைக் காத்திடுவாய் அன்புடனே மேவிய

பேயும் இரங்குமென்பார் பெண்ணென்றால் கொண்டலே
நீயிரங்கி னால்பிழைதான் நேர்ந்திடுமோ தூயநல்

காதலின் மாண்பனைத்தும் கண்டுரைத்த அன்பரிடம்
தூதுநீ செல்லத் துணிந்தெழுவாய்-மாதெனைநீ

காதலர் உறைவிடம்

எந்த நகரில் இருப்பார் அவரென்றால்
அந்த நகரை அறியேன்யான்-சொந்தநகர்

பொன்னி தவழும் புனல்நாட்டில் பூமடந்தை
மன்னும் திருவழுந் தூரென்பர்-மன்னரென

வெண்ணெய் நல்லூரில் விளங்கிய வள்ளலிடம்
கண்ணனையார் தங்கிக் கவிபொழிந்தார்-எண்ணுங்கால்

சீரொன்று கற்றோர்க்குச் சென்ற விடமெல்லாம்
ஊரென்று சொல்வார் உயர்புலவோர்-பாரில்

கவியரச ராயிருந்த கம்பரை அந்நாள்
புவியரச ரெல்லாரும் போற்றித்-தவிசளித்தார்

நாட்டரசன் கோட்டையினை நண்ணியவர் பொன்னுடலைப்
போட்டுவிட்டு மேலுலகம் போனபின்னர்-நாட்டில்

அவருக் கினியவிழா ஆண்டுதொறும் அன்பர்
தவறா தெடுக்கின்றார் தங்கி அவரதனைக்

காணவரக் கூடும் களிறனையாய் அப்போது
காணலாம் நீயவரைக் கண்ணார நீணிலத்தில்

கண்டுபே சுங்கால் கவிமழையால் நீகுளிர்ந்து
கொண்டுசென்ற நீரையங்குக் கொட்டாதே தண்டமிழ்த்

தேனோடும் மாநாட்டில் தேடியும் கண்டிலையேல்
வானோடு செல்ல வழிகாண்பாய்-மீனோடு

விண்ணில் பறக்கும் விரகுடையாய் நீயேஅப்
புண்ணியர்பால் செல்வாய் பொறுப்புடனே-வண்ணமயில்

தூதிற்குப் பயன் படாதவை

வானிலுனைக் கண்டால் வசமிழக்கும் வண்டுதான்
தேனைக் குடித்துத் திசைமறக்கும்-தேனுடுபால்

தந்துநான் வீட்டில் வளர்க்கும் தனிக்கிளியை
அந்த இடத்திற் கனுப்பினல்-முந்திநான்

காம மயக்கத்தால் காலரையாச் சொன்னவற்றைத்
தூமொழியார் கேட்கத் தொடர்ந்துரைக்கும்-பூமருவும்

அன்னந் தனையனுப்பின் அன்பரைக்கா ணுமலே
முன்வந்து கண்டேன் எனமொழியும்-சொன்னதைச் (75)

சோலைக் குயில்சென்று சொல்லாமல் பாடியன்பர்
வேலைதனைக் கெடுத்து மீண்டுவரும்-வேலைப்

பழித்த விழியுடையென் பாங்கியையான் ஏவின்
கொழுத்துத் தவறிழைக்கக் கூடும்-பழித்தறியா

நெஞ்சு தனை அனுப்பின் நேசரிடம் தூதுரைக்க
அஞ்சிநா ணத்தால் அணுகாது-மஞ்செனும் பேர்

தூது செல் என்றல்

பெற்ற கருமுகிலே பேதையேன் வாய்மொழியை
உற்றுநீ கேட்டங் குவந்தோடிக்-கொற்றவரைக்

கண்டு வருவாய்என் காமநோய்க்கோர் மருந்து
கொண்டு வருவாய்உன்னைக் கும்பிட்டேன்
—வண்டமிழர் (80)

நாட்டும் விழாஅரங்கென் நாயகர் ஓவியத்தைக்
காட்டும் அதனைநீ கண்டபின்னர்-நாட்டகத்தும்

விண்ணிலும்தேட விரைந்திடுவாய் விண்ணில் நீ
கண்ணுக் கினியாரைக் காண்பாயேல்-எண்ணில்

தவலருந்தொல் கேள்வித் தன்மை யுடையார்
அவர்திருமுன் வந்திருப்பர் அன்பால்-சுவையுணரும்

வ.வே.சு டி.கே.சி வை.மு.கோ வெ.ப.சு
உ.வே.சா போன்ருேர் உடனிருப்பர்-கோவேநீ

அத்தமிழ்ச் சான்ருேர் அகன்றபின் பையவே
முத்தமிழ்ப்பா வேந்தரின் முன்செல்வாய்—தத்திவரும்(85)

உன்னையவர் கண்டவுடன் உத்தமன் இ ராமபிரான்
தன்னையே கண்டதுபோல் தாம்மகிழ்ந்து-மின்னுகின்ற

காரே உனக்கிந்தக் கம்பனிடம் வேண்டியதென்
யாரே உனையிங் கனுப்பினுர்-நேரே

தயங்காமல் சொல்லென்பார் தன்முகிலே நீதான்
மயங்காமல் தாழ்ந்து வணங்கி-நயங்காட்டும்

காவியங் கண்ட கவியரசே மாசறியா
ஒவியங் கண்ட வுருவுடைய-தேவியுடன்

காடடைந்த காகுத்தன் காதையிலே பார்வையினை
ஓடவிட்ட கன்னி ஒருத்திஉம்—பாடலிலே (90)

நெஞ்சைப் பறிகொடுத்தாள் நேசத்தால் உம்முடனே
கொஞ்சி உறவாடக் கூவுகிருள்-வஞ்சியவள்

பாலை வெறுத்தாள் பழச்சா றனையஉம்
நூலைப் படிக்கின்ருள் நூறுமுறை-நூலை

இடையாகக் கொண்ட இளங்கொடியாள் உள்ளம்
உடையாமல் காத்தருள்வீர் ஓதும்-விடையாக

மாதர் இருவரையான் தீண்டேன் மனத்தாலும்
ஈதென் குறிக்கோள் எனக்கூறின்-சீதைக்குக்

காட்ட இராமன் கணையாழி தந்ததுபோல்
பாட்டரசே உம்திருக்கை பட்டவொரு-பாட்டோலை (95)
தந்தால் அனுமன்போல்தாவி எடுத்தோடி
இந்தா எனக்கொடுத் தேகிடுவேன்-சிந்தாமல்
அந்தணரே நாவுக் கரசே புகழேந்தி
வந்தவரே மாணிக்க வாசகரே-நொந்தவட்கு
மாலை அணிந்து மருவவா ராவிடினும்
ஓலை தருவீர் உவந்தென்றால்-சிலரவர்
தந்தருள்வார் ஓலையினைத்தண்முகிலே பெற்றவுடன்
வந்தனை செய்துவிட்டு வா.

புதுவை 15-5-77

கம்பன் கண்ட மனிதருலகம்

உம்பர் உலகும் அரக்கர்களின்
      உலகும் பறவை விலங்குலகும்
நம்பும் முனிவர் நல்லுலகும்
      நயந்து போற்றும் இராகவனும்
நம்பி தன்னைப் பெற்றெடுத்த
      நலத்தால் மனித ருலகந்தான்
கம்பன் கண்ட காவியத்தில்
      கருத்திற் கினிய உலகென்பேன். (1)

மண்கண்ட கனிச்சாறே மலைகண்ட
      நறுந்தேனே மதுரப் பாகோ
விண்கண்ட கடலமுதோ எனவியக்கும்
      படிகம்பன் விரித்த நூலில்
பண்கண்ட கவியிடையிப் பார்கண்ட
      மானுடத்தின் பாங்கு சொல்லப்
பெண்கண்ட நாவுடையான் பேரறிவு
      கல்காமல் பிழைசெய் தானே. (2)

பாராண்ட தசரதனின் பண்பெடுத்துச்
      சொல்வேனோ பழுதொன் றில்லாச்
சீராண்ட இராகவனின் சீலத்தை
      விரிப்பேனோ சீதை என்னும்
பேராண்ட திருமகளின் பெருமையினை
      உரைப்பேனோ பெருகுங் கங்கை
நீராண்ட குகனுடைய நேயத்தை
      என்பாட்டில் நிகழ்த்து வேனோ? (3)

இலக்குவனோ டுயர்பரத சத்துருக்கன்
மாண்பினைத்தான் இயம்பு வேனு
இலக்குமியை மருமகளாய் ஏற்றுயர்ந்த
அரசியரின் ஏற்ற மெல்லாம்
கலக்கமறப் பகர்வேனு கருங்குழலாள்
கைகேயி கருத்து மாறக்
கலக்கியமர் தரைஇயல்பைக் காட்டு வனு
சுமந்திரனின் கதைசொல் வேனு? (4)

திருமகளின் புக்ககமாய்த் திகழ்ந்திட்ட
கோசலத்தின் தெருக்கள் தோறும்
வருமகளிர் விழியம்பு வழிதவறிச்
செல்லாவாம் வனத்து லாவும்
பொருகளிறே அனையவர்தம் பொறியைந்தும்
நெறிதவறிப் போகாவாம் அப்
பெருநிலத்து மாந்தரெலாம் பிடமிக்கும்
சீற்றமிலாப் பெற்றி யோராம் (5)

அறிவு மணக்கும் மொழிகளிலே
அன்பு மணக்கும் விழிகளிலே
செறிவு மணக்கும் செய்கையிலே
செல்வம் மணக்கும் செங்கையிலே
நிறைவு மணக்கும் சிந்தையிலே
நேர்மை மணக்கும் சந்தையிலே
உறவு மணக்கும் வீட்டினிலே
உரிமை மணக்கும் நாட்டினிலே (6)

அகப்பொருள் களவுண்ட ல்லால்
அரும்பொருட் களவங் கில்லை
மிகப்பொருள் கொடுப்பா ருண்டு
மெலிவிறல் கொள்வா ரில்லை
பாவையைப் பணிவார் உண்டு
பகைவரைப் பணிவா ரில்லை
காவியம் கற்பா ருண்டு
கயமையைக் கற்பா ரில்லை (7)

அருளேந்தும் அறமூர்த்தி யாகக் கம்பன்
அன்பேந்தும் தசரதனைக் காட்டு கின்றான்
தெருளேந்தும் அப்பெரியோன் ஊழல் அற்ற
தெளிவேந்தும் அமைச்சர்களைத் துணையாக் கொண்டான்
பொருளேந்தி வேந்தரெலாம் வந்தே அந்தப்
பொருப்பேந்து தோளானைப் போற்று வாராம்
மருளேந்தும் மான்விழியார் பலரைக் கொண்ட
மாமன்னன் கேகயன்மான் வலையில் வீழ்ந்தான் (8)

எப்போதோ கொடுத்தவரம் இரண்டைக் கட்டி
இரும்புதந்த நெஞ்சுடையாள் கேட்டாள் வேந்தன்
இப்போதே கொடுக்கின்றேன் கவலை வேண்டா
இராமன்மேல் ஆணையென்றான். கூற்றின் தூதாய்
அப்போதே மாறிவிட்ட கொடியாள், கொண்டான்
ஆவியையே பறிக்கின்ற வரத்தைக் கேட்டாள்
ஒப்பேதும் இல்லாத அறத்தை என்றும்
உயிராகக் கொண்டவனோ ஈந்தேன் என்றான் (9)

அந்த நாளில் மாமன்னன்
அளித்த வாக்கைக் காப்பாற்றச்
சிந்தைக் கினிய மைந்தனையே
செல்ல விட்டான் காட்டுக்கே

இந்த நாளில் வாக்குறுதி
எழுத்து வடிவில் இருந்தாலும்
அந்த வாக்கை மறுத்துன்னல்
ஆன தைப்பார் என்கின்ருர் (10)

தந்தை பலரை மணந்திருந்தும்
தனயன் இராமன் சீதையினை
வந்து மணந்த நாளன்றே
வாழ்வில் மாதர் இருவரையான்
சிந்தையாலும் தொடேன் என்ருன்
சீதை பிரிந்த காலத்தும்
தந்த வரத்தை மறக்கவிலை
தடையை மீற நினைக்கவிலை (11)

பற்றெழித்து வாழ்கின்ற துறவி கூடப்
பதவியெனில் வாய்திறப்பா னென்பர் அன்று
கொற்றவனும் தசரதனே தன்னை நோக்கிக்
கொள்வாய் இவ் வரசையெனச் சொன்ன போது
சற்றுமதை விரும்பாமல் வெறுத்திடாமல்
சார்ந்தவொரு கடமையென்றே இராமன் ஏற்ருன்
மற்றதனைத் துறந்திட்ட போதும் அந்த
மாமனிதன் மனமாற்றம் உற்ருனல்லன் (12)

நாடாள இருந்ததன்னை வரவமைத்தே
நாயகனை வானுள்ச் செய்த பாவி
நாடாளு வான்பரதன் பதினுன் காண்டு
நற்றவர்போல் சடைதாங்கித் தவமேற் கொண்டு
காடாளு வாயினிநீ என்ற போது
காகுத்தன் திருமுகந்தான் அன்றலர்ந்த
வாடாத தாமரையை வென்றதென்று
வருணிக்கின் ருன் கம்பன் வியப்பில் ஆழ்ந்தே (13)

தான் பெற்ற மைந்தனுக்கே
தரணியை ஆட்சி செய்யும்
வான் பெற்ற பதவிதன்னை
வழங்கிட வேண்டு மென்று
தேன்பெற்ற மொழியாள் அன்று
திடமுடன் முயன்ற தாலே
தான்பெற்ற பூவும் பொட்டும்
தகுதியும் இழந்து நின்றாள் (14)

போரிடைத் தேரை ஒட்டிப்
புரவலன் தன்னைக் காத்துச்
சீருடை வரத்தைப் பெற்ற
சேயிழை அதேவ ரத்தால்
போரிடைக் காத்த அந்தப்
புண்ணியன் உயிரைப் போக்கிப்
பாரிடைப் பழிசு மந்தாள்
பரதனும் கலங்கச் செய்தாள் (15)

பாகத்தைப் பிரிக்குங்கால் உடன்பி றந்தோர்
பண்பனைத்தும் வெளியாகும் தமக்கு வந்த
பாகத்தில் குறைசிறிது கண்டால் போதும்
பாய்கின்ற புலியாவர் மனைவி கொஞ்சம்
வேகத்தை உள்ளிருந்து முடுக்கி விட்டால்
வெட்டுகின்ற அரிவாளை எடுப்பர் இன்றேல்
பாகத்தைச் சரிசெய்ய நீதி மன்றப்
படியேறிக் கடைசிவரை பார்ப்பேன் என்பர் 16
பேர்கொண்ட தசரதன்தான் பெற்றெடுத்த
பிள்ளைகளோ இத்தகையர் அல்லர் குன்றாச்
சீர்கொண்ட வளநாட்டைத் தனக்கே தந்த
தாயினையே சீஎன்றான் பரதன் இந்த

நேர்கொண்ட நெஞ்சுடையான் பழிக்கு நாணி
நீர்கொண்ட விழியோடு கான டைந்து
கார்கொண்ட நிறத்தானைக் கண்டு தாழ்ந்து
கயல்கொண்ட புனல்நாட்டைக் கொள்வாய் என்றான் 17
மாற்றான்தாய்க் கொடுமையெனும் கூற்றைக் கம்பன்
மாற்றுகின்ற அற்புதத்தை என்ன சொல்வேன்!
மாற்றாளாம் கோசலையின் மைந்தன் காட்டு
வாழ்க்கையினை மேற்கொள்வ தறிந்தும் அன்பு
மாற்றாத சுமித்திரைதான் பெற்றெ டுத்த
மைந்தனையே துணையாக விடுத்தாள் அன்னாள்
கூற்றாக அமைந்துள்ள கம்பன் பாட்டைக்
கூறக்கேட் டால்மலையும் உருகுங் கண்டீர் (18)
தானீன்ற மகனுக்கு முடிகிட் டாமல்
தடையிட்ட கைகேயி மகனை வையம்
தானீன்றான் தனையீன்றான் தன்னை ஈன்றாள்
தயங்காது பாராட்டு கின்றாள் நீல
வானீன்ற கருமுகிலே அனைய மேனி
மைந்தனினும் மிகநல்லன் என்றாள் அந்தக்
கானீன்ற குகனையுந்தன் மைந்த னாகக்
கருதிமனம் குழைந்துருகித் தேற்று கின்றாள் (19)
கற்புக்கு விலைகுறைந்து விட்ட இந்தக்
காலத்தில் வாழ்கின்ற நமக்கே கம்பன்
அற்புதமாய்க் காட்டுகின்ற சீதை கற்பின்
அருமையெலாம் புலனாகும் இலங்கை என்னும்
பொற்புடைய நகர்கண்டும் இராவ ணன்றன்
புகழ்கேட்டும் மயங்காமல் மிதிலைச் செல்வி
விற்பெருந்தோள் வீரனையே எண்ணி எண்ணி
விரிகடல்சூழ் இலங்கையிலே தவங்கி டந்தாள் (20)

பிறைகாட்டும் திருநுதலார் வெளியிற் சென்ருல்
பேய்காட்டும் மனமுடைய பித்த ராலே
கறைகாட்டும் உடலுடையர் ஆவார் என்றே
கதைகாட்டும் மாந்தரெலாம் நாணச் சீதை
சிறைகாட்டும் துயரத்தைத் தாங்கிக் கொண்டு
சீர்காட்டும் கற்பினையே காத்தாள். பெண்கள்
நிறைகாட்டும் திண்மையுடன் இருந்தால் தீய
நெறிகாட்டும் கயவர்கள் தாம் நெருங்கு வாரோ (21)

நம்பியைத் தொடர்ந்து சென்ற
இலக்குவன் தன்னை நல்ல
தம்பியென் றுரைத்தால் தம்பி
தாயபா கத்தைக் கேட்பான்
நம்பிடும் பணியாள் என்ருல்
நயந்தவன் கூலி கேட்பான்
கும்பிடும் பக்தன் என்ருல்
வரத்தினைக் கோரி நிற்பான் (22)

தொண்டனென் றுரைத்திட் டாலோ
தொண்டனும் பசிதான் நீங்க
உண்டபின் களைப்பி னலே
உறங்குவ துண்டாம். காட்டில்
கண்டவர் வியக்க அண்ணன்
நலத்தினைக் கருதிக் கையில்
கொண்டவில் லோடு சென்ற
குரிசிலுக் கிணைதா னுண்டோ (23)

கங்கையின் கரையில் தோன்றும்
கரையிலா அன்பி னேடு
பங்கயக் கண்ண னுக்குப்
பணிசெய நின்ற வேடன்

கங்கைவார் சடையா னுக்கே
கண்ணினை அப்பி நின்ற
துங்கமார் திருக்கா ளத்தி
வேடனைத் தோன்று கின்றான் (24)

காரளந்த திருமேனி இராமன் காதை
கற்றிடுவார் கூனியினைப் பழிப்பர் ஆனால்
போரளந்த பாரதத்தைப் படிப்போர் அந்தப்
பொல்லாத கேசவனைப் பழிப்ப தில்லை
பாரளந்த கண்ணனில்லை என்றால் பூமி
பாரந்தான் நீங்கிடுமா என்பர் கூனி
சீரளந்த மனத்தாளை மாற்றா விட்டால்
சிதைந்திடுமா இராவணனின் கொடிய ஆட்சி (25)

கோசலை என்றால் பாசம்
குகனெனச் சொன்னால் அன்பு
மாசிலாச் சீதை கற்பு
மந்தரை என்றால் சூழ்ச்சி
ஆசிலா பரதன் நீதி
அண்ணனோ கடமை; யாரும்
பேசிடும் அறம்மா மன்னன்
பிள்ளைசத் துருக்கன் தொண்டு. (26)

கற்றவர் நெஞ்சை யள்ளும்
கம்பனின் உலகைக் காணச்
சுற்றுலா ஊர்தி ஏறிச்
சோர்வுற வேண்டா உண்மைப்
பற்றுடன் கவிதை என்னும்
பலகணி வழியாய் நோக்கின்
உற்றிடும் இன்பக் காட்சி
உயர்ந்திடும் அறிவின் மாட்சி. (27)

சென்னை 14-8-77

கோனாட்சியில் குடியாட்சி!

கோனாட்சி அதாவது மன்னராட்சி முதன் முதலில் எந்த நாட்டில் தோன்றியதென்றோ எந்த நூற்றாண்டில் தோன்றியதென்றோ வரையறுத்துக் கூற இயலாது ஏன்? அத்துணைப் பழைமை வாய்ந்தது அது நாடோடிகளாய்த் திரிந்த ஆதி மனிதர்கள் குறிப்பிட்ட நிலப்பகுதியில் தங்கிக் குடில்களையமைத்துக்கொண்டு கூடி வாழத் தொடங்கிய காலத்தில் கோனாட்சி அரும்பியிருக்கக் கூடுமென்று வரலாற்றறிஞர் கருதுகின்றனர்.

உள்நாட்டில் குற்றம் நிகழாமல் தடுத்து உழவுக்கும் தொழிலுக்கும் ஊக்கமளித்துப் பகைவர் படையெடுப்பை முறியடித்து மக்கள் நலனைப் பாதுகாக்கத் தோன்றியதே மன்னராட்சி; முறைவழுவாமல் ஆட்சி செய்யும் அரசனைச் சான்றோர் இறைவனாகக் கருதினர்;

> முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
> இறையென்று வைக்கப் படும்

என்றார் திருவள்ளுவர். "திருவுடை மன்னரைக் காணின் திருமாலைக் கண்டேனே" என்னு"மென்பது திருவாய்மொழி. ஆயின், மக்கள் நலனைப் புறக்கணித்து மனம் போன போக்கில் கொடுங்கோலாட்சி புரியும் மன்னர்கள்

அவ்வப்போது தோன்றினர். அவர்களது ஆட்சிக் காலத்தில் மக்கள் எல்லையற்ற தொல்லைகளுக்கு ஆளாயினர். அறிஞர் வகுத்த அரசியல் நெறிகளைக் கொடுங்கோலர் மதித்தாரல்லர். மக்களுக்காக மன்னன் என்பதை மறந்து மன்னனுக்காகவே மக்களென்ற நினைப்போடு ஆணவக் குன்றேறி மன்னர்கள் ஆட்சி செலுத்திய காரணத்தால் 'ஒரு மனிதன் தேவைக்கே இந்தத் தேசம் உண்டென்றால் அத்தேசம் ஒழிதல் நன்றாம்' என்னும் புரட்சிக் குரல் மக்களிடையே எழுந்தது; வானாட்சியின் வழிவந்தது கோனாட்சியென்று போற்றி வாழ்ந்த மக்களே அதனை வீணாட்சியென்று வெறுத்தொதுக்கிக் குடியாட்சிக்கு வழி வகுத்தனர்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் நடத்தும் ஆட்சியே குடியாட்சி எனப்படும். குடியாட்சிக்கு விளக்கங்கூறும் முறையில் மகாகவி பாரதியார்

> "குடிமக்கள் சொன்னபடி குடிவாழ்வு மேன்மையுறக்
> குடிமை நீதி"

என்றார். மக்கள் நலனுக்கும் விருப்பத்திற்கும் மாறாக அமையுமாட்சி குடியாட்சியே எனினும் கொடுங்கோலாட்சியாகக் கருதப்படும். எனவே மக்களது நல்வாழ்வைக் கருத்திற்கொண்டு அவர்கள் விருப்பத்தை நிறைவேற்றப் பாடுபடுவதே குடியாட்சியின் குறிக்கோளாகும். இதனைக் கோனாட்சியில் அமைத்துக் காட்டியுள்ளான் கவிச்சக்கரவர்த்தி கம்பன். இராமாவதாரமென்னும் அவனது காவியமாளிகையில் இந்த அற்புதத்தைக் காணலாம்.

கம்பன் வாழ்ந்த காலம் கி. பி. 9 ஆம் நூற்ருண்டாகும். சிலர் 12 ஆம் நூற்ருண்டெடன்பர். அது எப்படியிருப்பினும் அவன் வாழ்ந்த காலத்தில் சோழ மன்னனெருவன் சோழநாட்டையண்டு வந்தானென்பதில் ஐயமில்லை. அம்மன்னனேடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த கம்பன் அவனது சர்வாதிகாரப் போக்கை நேரில் கண்டு வெறுப்படைந்து நீங்கியபோது:

மன்னவனும் நீயோ வளநாடும் உன்னதோ
உன்னையறிந் தோ! தமிழை ஓதினேன்-என்னை
விரைந்தேற்றுக் கொள்ளாத வேந்துண்டோ உண்டோ
குரங்கேற்றுக் கொள்ளாத கொம்பு.

என்று பாடினன். அந்நிலையில் அவன் மக்களது கருத்திற்கு மதிப்பளிக்கும் ஆட்சியைப் பற்றிச் சிந்தித்திருத்தல் இயல்பே. இராமாயணத்தில் கம்பன் காட்டும் கோசல நாட்டில் வறுமை இல்லை. எனவே எவருக்கும் வள்ளலாவதற்குரிய வாய்ப்பில்லை கல்லாதவரே இல்லாத நாடு அது; பெருந்தடங்கண் பிறைநுதலாரும் பொருந்து கல்வி உடையராய்ப் பொலிகின்றனர். விழுப்பந்தரும் ஒழுக்கத்தினை ஆடவரும் மகளிரும போற்றி வாழ்கின்றனர். கோசல நாட்டவரனைவரும் செம்மனத்தினர். எனவே அவர்களிடம் சினம் உண்டாவதில்லை. குற்றம்புரிவோர் அந்நாட்டிலில்லாமையால் கூற்றத்தின் சீற்றத்திற்காளாகி அகால மரணமடைவோர் எவருமில்லை. சுருங்கக்கூறின் அறவாழ்வின் உறைவிடமே கோசலமெனலாம்.

கூற்ற மில்லையோர் குற்ற மிலாமையால்
சீற்ற மில்லைதம் சிந்தையின் செம்மையால்
ஆற்ற நல்லற மல்லதி லாமையால்
ஏற்ற மல்லது இழிதக வில்லையே

இத்தகைய மாசறியாக் கோசலத்தின் தேசுடைத்தலை நகர் அயோத்தி. நிலமகள் முகமோ, திலகமோ கண்ணே நிறைநெடு மங்கலநாணே என்று வியக்கும் நிலையில் அவ்வணிநகர் விளங்குகின்றது. அங்கே ஈயென்றிரப் போருமில்லை கொள்ளென்று கொடுப்போருமில்லை; காவலர் நடமாட்டம் யாண்டுமில்லை ஏன்? கள்வரில்லாமையால்.

அயோத்தியில் எல்லோரும் கல்வியறிவிற் சிறந்து விளங்குகின்றனர். எனவே கற்றுவல்லாரிவரென்று சுட்டிக் கூறும் தனிச்சிறப்புக்குரியார் எவருமில்லை. மாந்தரனைவரும் தமக்கு வேண்டிய எல்லாப்பொருள்களையும் குறைவறப்பெற்று வாழ்கின்றனர். இவரில்லார், அவருடையார் என்று கூறும்படி மக்கள் நிலைமை ஏற்றத் தாழ்வுடையதாக இல்லை. பொருளாதாரச் சமத்துவம் பொலிகின்றதங்கே.

கல்லாது நிற்பார் பிற ரின்மையின் கல்வி முற்ற
வல்லாரு மில்லை அவைவல்லர் அல்லாரு மில்லை
எல்லாரும் எல்லாப் பெருஞ்செல்வமும் எய்தலாலே
இல்லாரு மில்லை உடையார்களு மில்லை மாதோ

வறுமையில்லை, கல்லாமையில்லை, களவில்லை, கயமையில்லை, இத்தனையுமில்லாத வீசுபுகழ்க்கோசலம் குடியாட்சியின் கீழில்லை. ஆயின், குடியாட்சித் தத்துவக் கயிற்றிலாடும் கோனாட்சியின்கீழ் அதனை அமைத்துக் காட்டுகின்றான் கவிச்சக்கரவர்த்தி.

சூரிய குலத்தவனான தசரதனே கோசல நாடாளும கொற்றவன். விராவரும் புவிக்கெலாம் வேதமேயென இராமனைப் பெற்றவன் அவன். முடிகவித்தாளும் மன்

ஊனேயெனினும் குடிதழீஇக் கோலோச்சும் கொள்கை யன். தன்னலத்தின் வழியில்லாத் தகைமையன். அவனை அறமூர்த்தியென்று குறிப்பிடுகின்றான் கம்பன். குடிக ளிடம் அன்பு செலுத்துவதில் தசரதன் தாயைப் போன் றவன். நலம் பயப்பதில் தவத்தைப் போன்றவன். ஆவன செய்வதில் சேயைப் போன்றவன். வருந்தும் பிணியாளர்க்கு மருந்து போன்றவன். இன்பமளிப்பதில் அறிவு போன்றவன். இத்தகையோனாய் இருந்தும் அவன் குலகுருவசிட்டர் வாய்மொழி கேட்டும் மந்திரக் கிழவர் மதிவழி நின்றும் மாநிலத்தை ஆள்கின்றான். இதனை அவனே அவர்களிடம் கூறுவதைக் கேட்போம்.

“ வெய்யவன் குலமுதல் வேந்தர், மேலவர்,
செய்கையின் ஒருமுறை திறம்பல் இன்றியே
வையமென் புயத்திடை, நுங்கள் மாட்சியால்
ஐயிரண் டாயிரத் தாறு தாங்கினேன்.”

தசரதனின் அமைச்சர்கள் குடியாட்சி முறைப்படி மக்க ளால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அல்லர். எனினும் மக்கள் கருத்துணர்ந்து செயலாற்றும் மாண்புடையவர் கள். கல்வி, கேள்வி, அறிவு, ஒழுக்கம், ஆன்ற குடிப் பிறப்பு முதலியவற்றில் சிறந்து விளங்குபவர். இதனைக் கம்பன் கற்கண்டனைய ஏழு கவிகளில் விரித்துக் கூறு கின்றான். அவற்றுள் ஒன்று இதோ.

உற்றது கொண்டு, மேல்வந்துறுபொருள் உணருங்
கோளார்;
மற்றது வினையின் வந்ததாயினும், மாற்றலாற்றும்
பெற்றியர்; பிறப்பின் மேன்மைப் பெரியவர்;
அரிய நூலும்
கற்றவர்; மானம் நோக்கின் கவரிமா அனைய நீரார்

சிங்கஏற்றின் வலிபடைத்த தசரதன் தன் குடைக்கீழ் தங்கி வாழும் உயிர்களைத் தன்னுயிர்போல் எண்ணிக் காத்து வருகின்றான். எனவே அவன் உயிர்களெல்லாம் தங்கி வாழும் பேருடம்பாகத் திகழ்கின்றானென்று கம்பன் வியந்து பாடுகின்றான்.

“ வயிரவான் பூண்அணி மடங்கல் மொய்ம்பினான்
உயிரெலாம் தன்னுயிர் ஒப்ப ஓம்பலால்
செயிரிலா உலகினில், சென்று நின்றுவாழ்
உயிரெலாம் உறைவதோர் உடம்பும் ஆயினான்.”

இப்பாடலில் கம்பன் குடியாட்சித் தத்துவத்தின் உயிர் நாடியைத் தொட்டுக் காட்டுகின்றான். உயிர் விரும்புவதை உடல் செய்வதியற்கை. குடிமக்கள் உயிராகவும் கொற்றவனுடம்பாகவும் இருக்கின்றானென்பதால் மக்கள் விருப்பமறிந்து மன்னன் ஆட்சி செய்கின்றானென்பது தெளிவாகின்றது இக்கருத்தையே வேறோரிடத்தில்

“ வையம் மன்னுயி ராகஅம் மன்னுயிர்
உய்யத் தாங்கும் உடலன்ன மன்னவன் ”

என்று தெய்வ மாக்கவி கூறுகின்றான். தசரதனைப் போன்ற அரசன் ஆட்சி செய்யும் நாட்டில் குடியாட்சி கோரிப் புரட்சிதான் எழுமா? கிளர்ச்சிதான் முளைக்குமா?

தசரதன் தன் மூத்த மைந்தன் இராமனுக்கு முடி சூட்ட விரும்புகின்றான். இதற்கும் அவன் தன் அதிகாரத்தைப் பயன்படுத்தாமல் மந்திரக்கிழவர் இசைவை நாடுகின்றான். வசிட்டரும் அமைச்சர்களும் அழைத்துவரப் படுகின்றனர். மன்னன் கருத்தறிந்த இப்பெரியவர்கள் தங்கள் விருப்பத்தை மட்டும் கருத்திற் கொள்ளாமல்

மக்கள் விருப்பத்தையும் உய்த்துணர்ந்து முடிவு கூறு கின்றனர். நாட்டில் கற்றவரும் கல்லாதவரும் இராமனை எப்படி விரும்புகிறார்களென்று கூறும்பொழுது வசிட்டர் "உண்ணும் நீரினும் உயிரினும் அவனையே உவப்பார்" என்று மக்கள் கருத்திற்கு மதிப்பளித்துப் பேசுகின்றார்.

முடிசூடிக்கொள்ளவிருக்கும் கோசலை மைந்தன் இராமனுக்கு வசிட்டர் அரசியல் நெறிமுறைகளைக் கூறும் பொழுது அமைச்சர்களின் இன்றியமையாத் தன்மையை வற்புறுத்துகின்றார். சிவபெருமான், திருமால், நான் முகன் ஆகிய மும்மூர்த்திகளுக்கும் அமைந்த தோள் வலியை ஒருங்கு பெற்ற மன்னராயிருப்பினும் அமைச்சர் சொல்வழி நின்று செயலாற்றுதலே அமைவுடைத்தென் பது கம்பன் கருத்து

"உவமைக்கு நாதற்கும் ஒங்குபுள் ஊர்திக்கும்
இமைப்பில் நாட்டமோர் எட்டுடை யானுக்கும்
சமைத்த தோள்வலி தாங்கினர் ஆயினும்
அமைச்சர் சொல்வழி ஆற்றுதல் ஆற்றலே"

இலங்கையின் சர்வாதிகாரி இராவணன். இவன் சொற் படி அமைச்சர்களும் பிறரும் நடக்கவேண்டும். இவன் செய்வதே சரி. அதுவே சட்டம் நாட்டிலெவரும் இவன் கிழித்தக் கோட்டைத் தாண்டக் கூடாது. இப்படிப்பட்ட வனுக்குத் துணிந்து அறிவுரை கூறினன் தம்பி வீடணன். அதனால் விரட்டப்பட்டான். மறத்திற்குத் துணைபோக விரும்பாத வீடணன் தன்னுடன் வந்த நான்கு அமைச் சர்களோடு அறத்தின் நாயகன் இருக்குமிடத்தை அடை கின்றான். ஐவரும் இராகவன் சரணல்லால் சரணில்லை யென்ற முடிவிற்கு வருகின்றனர். வீடணன் கருத்தை

மயிந்தனென்னும் வானரவீரனுல் அறிந்த சீதை கேள்வன் தானுக ஒரு முடிவெடுக்கவில்லை. தன் துணைவர்களான சுக்கிரீவன், சாம்பன், நீலன், அனுமன் முதலியோரை நோக்கித் தங்கள் கருத்தை விரித்துக் கூறும்படி கேட்டுக் கொள்கின்ருன்.

அனுமனைத்தவிர மற்ற அனைவரும் வீடணனைச் சேர்த்துக் கொள்ளக் கூடாதென்று கூறுகின்றனர். எல்லோருடைய கருத்துக்களையும் பொறுமையுடன் கேட்டறிந்த காகுத்தன் சுக்கிரீவன் முதலியோர் மொழிந்த கருத்துக்கள் தள்ளத்தக்கவை யென்பதற்கும் அனுமன் கூறிய கருத்தே கொள்ளத்தக்கதென்பதற்கும் பொருத்தமான காரணங்களை எடுத்துக்கூறித் தன் முடிவை அறிவிக்கின்ருன். எல்லோரும் அதனை ஏற்றுக்கொண்டபின் வீடணனைச் சேர்த்துக்கொள்ளக் கூடாதென்று கூறிய பேரணிக்குத் தலைமை தாங்கிய சுக்கிரீவனையே அனுப்பி அவனை அழைத்துவரச் செய்கின்ருன். இராமனது முடிவுரை இது.

''ஆதலான், ''அபயம்''என்ற பொழுதத்தே, அபயதானம்
ஈதலே கடப்பா டென்பது; இயம்பினீர், என்பால் வைத்த
காதலான்; இனிவேறு எண்ணக் கடவதென் கதிரோன்மைந்த
கோதிலா தவனைநீயே என்வயின் கொணர்தி என்ருன்''

இப்பாட்டில் உள்ள கோதிலாதவனை என்னும் தொடர் பல பொருள் தந்து கம்பனின் அறிவாற்றலைப் புலப்படுத்துகின்றது.

பெரும்பான்மையோர் கருத்தின் வழி நடப்பது குடியாட்சி. சிறுபான்மையினர் எதிர்க்கட்சியினராவர். இவர்

கள் கூறுங்கருத்து விழுமிய பயனை விளக்குமாயின் அரசு அதனைத் தயங்காமல் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்னும் அருமையான கருத்தை வீடணன் அடைக்கலப் படலத்தில் கம்பன் தெளிவு படுத்துகின்றான். கோனாட்சி நிரந்தரமாக நிலைத்து நிற்கப்போவதில்லையென்பதைத் தன் தீர்க்க தரிசனத்தால் உணர்ந்து கொண்ட தெய்வமாக்கவி தன் இராம காதையில் குடியாட்சியின் அடிப்படைக் கொள்கைகளை உய்த்துணர வைத்துள்ளானென்று கூறுதல் சாலப்பொருந்தும்.

புதுவை வானொலியில் 15—11—73